SC.No. 138/2018
PW – 5
11.08.2025.
பெயர் : நாடிமுத்து
த/பெ. : சின்னப்பா

<u>குறுக்கு விசாரணை</u>

செங்கல் தயாரிக்கும் மண்ணை அள்ளும் கூலி வேலை செய்து வந்தேன். தினமும் மாலை 6.00 மணியளவில் வேலை முடித்து வருவேன். சாட்சி சித்திரகண்ணு என் உடன்பிறந்த அண்ணன் ஆவார். செல்வம் வீட்டிற்கும் என்னுடைய வீட்டிற்கும் வேறு வேறு வாசல்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். சாட்சி செல்வம் வீட்டை கடந்து தான் என்னுடைய வீட்டிற்கு செல்ல முடியும் என்று சொன்னால் சரிதான். எதிரி ரவிக்குமார் வீட்டிற்கும் என்னுடைய வீட்டிற்கும் இடையே சுமார் 20 அடி தூரம் இருக்கும். சாட்சி செல்வம், எதிரி ரவிக்குமார் மற்றும் என்னுடைய வீடு ஆகிய வீடுகளுக்கு செல்வதற்கு கண்ணகி தெருவில் இருந்து செல்லும ஒரே சந்து வழியாக செல்ல வேண்டும் என்று சொன்னால் சரிதான். பள்ளிவாசல் தெருவிற்கும் மேற்படி சந்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். சந்துபாதை சம்மந்தமாக எங்களுக்கும் சிதம்பரம் வாத்தியார் மற்றும் எதிரிகளுக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டு சிவில் வழக்கு நடைபெற்று வருகிறது என்று சொன்னால் சரிதான். சம்பவ சமயத்தில் எனது அண்ணன் வந்தபோது நான் வீட்டிற்குள் இருந்தேன் என்று சொன்னால் சரிதான். அந்த சந்திற்குள் மின்விளக்குகள் எதுவும் இல்லை. சத்தம் கேட்ட பிறகுதான் உள்ளே இருந்து எழுந்து வந்தேன். என்ன பிரச்சனை, என்ன சம்பவம் நடைபெற்றது என்று சாட்சி செல்வம் சொல்லி தான் எனக்கு தெரியும். வழக்கு சம்மந்தமாக போலிசார் எந்த தேதியில் என்னை விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது அண்ணன் சித்திரகண்ணுடன் வேறு யாரும் உடன் வந்தார்களா என்று போலிஸ் விசாரணையின்போது கூறவில்லை. சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும், நான் முதல் விசாரணையில் தெரிவித்தது போன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னாலும், அ.சா.1 மற்றும் போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் தான் நான் இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகளுக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Sd/– நாடிமுத்து

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.